*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி VII, பதிப்பு 20, ஏப்ரல்-செப்டம்பர 2020
*Formally UGC Approved Journal (64089), © Author*

# ஊசிகள் கவிதைகளில் சமூகப் பிரச்சனைகள்

**முனைவர் பா. ஈஸ்வரன்**
கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), ஆனந்த் நகர்,
கிருஷ்ணன்கோவில், திருவில்லிப்புத்தூர்,

**முன்னுரை**

ஊசிகள் கவிதைகளில் அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டைக் கூறுவதில் கிண்டல், குத்தல் உத்திகளைக் கையாளுதல். அரசியல் வாதிகள் வறுமையை வெளியேற்றும் விதத்தைக் கேலி செய்தல். கல்வி பெறுவதில் மக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் கூறுதல். திரைப்பட நடிகைகளைப் பார்க்கச் சென்றதால் ஏற்பட்ட காயங்கள். காதலிப்பவர்கள் குலப்பாகுபாடு பார்த்துக் காதலிக்கின்ற சூழல் நிலவுதல். காதலின் இன்றைய நிலையை வெளிப்படுத்துதில் நகைச்சுவைத் தன்மையை வெளிடுப்படுத்துதல். போலித் தமிழ்ப் பற்றாளர்களின் நிலையைச் சுட்டிக்காட்டுதல். அரசு அலுவலர்களின் அலுவலகச் செயல்பாடுகளை விவரித்தல். அரசுப்பள்ளி ஆசிரியர்கள் பாடம் நடத்துகின்ற தன்மையும் புலம்பல்களும் ஆகிய சமூகப் பிரச்சனைகளைக் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆசிரியர் அறிமுகம்**

மீராவின் இயற்பெயர் மீ.ராஜேந்திரன் என்பதாகும். இவர் சிவகங்கை மாவட்டத்தில் 10.10.1938 ஆம் ஆண்டு மீனாட்சிசுந்தரம் – இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முதுகலைத் தமிழ் படித்தவர். கவிஞர் அப்துல் ரகுமான் மீராவின் வகுப்புத்தோழர். இவர் இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், ஊசிகள், கோடையும் வசந்தமும், குக்கூ என்னும் கவிதைப் படைப்புகளின் வாயிலாகத் தமிழ் உலகிற்கு அறிமுகமானவர். தொடக்கத்தில் சிவகங்கை மன்னர்

கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பின்பு முதல்வர் பொறுப்பு வரை பதவி உயர்வு பெற்று, பணி ஓய்வு பெற்றவர். தந்தைப் பெரியார், அறிஞர் அண்ணா, அறிஞர் காரல் மார்க் மூவரின் சங்கமமாகக் கவிஞர் மீராவின் செயல்பாடு காணப்படும். இவர் 1.9.2002 ஆம் ஆண்டு மறைந்தார்.

**அரசியல்வாதிகளின் செயல்பாடு**

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தொண்டு செய்வதில் வேகத்தைக் காட்டவில்லை. இதற்கு மாறாகத் தாங்கள் பதவி பெறுவதற்கும் பணம் பெறுவதற்குமாகக் கட்சி விட்டு கட்சி மாறுவதில் வேகத்தைக் காட்டுகின்றனர். இதனை,

***“எங்கள் ஊர் எம்.எல்.ஏ***
***ஏழு மாதத்தில்***
***எட்டுத் தடவை***
***கட்சி மாறினார்***
***மின்னல் வேகம்***
***என்ன வேகம்?”[1]***

என்னும் கவிதை எடுத்துரைக்கின்றது. மேலும், கவிஞர் மீரா இக்கவிதையின் வாயிலாக இன்றைய அரசியல்வாதிகளின் தரத்தினைக் கிண்டலும், கேலியும், குத்தலும், நையாண்டியும் செய்திருக்கின்ற பாங்கினைக் காணமுடிகின்றது. அதனால்தான், எழுபது கட்சியிருந்தாலும் இதைவிட இன்னும் கட்சி மாறுவதில் வேகம் காட்டியிருப்பார்கள் என்று வஞ்சப்புகழ்ச்சியாகக் கூறுகிறார்.

**வறுமையை வெளியேற்றும் விதம்**

மக்களிடம் காணப்படுகின்ற வறுமையை வெளியேற்ற வேண்டுமென்றால், அவர்களுக்கு அடிப்படைத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், தண்ணீர், கல்வி ஆகியவற்றைப் பெறுவதற்கான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல் வேண்டும். இது நாட்டை ஆளுகின்ற அரசு மற்றும் அரசியல் வாதிகளின் தலையாய கடமைகளாகும். இக்கடமைகளை அரசியல்வாதிகள் செய்வதில்லை. மாறாக ஒருவேளை உணவுக்கே வழியில்லாமல் வறுமையில் வாடியிருக்கின்ற ஒருவர், செட்டியார் வீட்டுத் திருமணப் பந்தியில் சாப்பிவதற்காக அமர்ந்திருக்கின்றார். அப்போது, அங்கு சென்ற அரசியல்வாதி அவரை எட்டி உதைத்து வெளியேற்றுகின்ற

செயலை ஆசிரியர் ‘வறுமையே வெளியேறு’ என்னும் கவிதையின் வாயிலாக நையாண்டி செய்துள்ளார். இதனை,

*“செட்டியார் வீட்டுத்*
*திருமணப் பந்தியில்*
*எதுவும் பேசாது*
*எங்கள் தலைவர்*
*எட்டி உதைத்தார்...*
*வறுமை,*
*வேக வேகமாய்*
*வெளியே றிற்று -*
*பரட்டைத் தலையும்*
*எலும்பும் தோலும்*
*கிழிந்த கந்தையுமாக......!”[2]*

என்னும் கவிதையடிகள் உணர்த்துகின்றன. இன்றும் அரசும், அரசியல்வாதிகளும் வறுமையில் வாழ்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட வழிவகை செய்வதில்லை. மாறாக இலவசம் என்பதைக் கொடுத்து மக்களைச் சிந்திக்க முடியாதபடி செய்கின்றனர். இதனால், காலகட்டத்திற்கு ஏற்றாற்போல் சில இடையூறுகள் ஏற்படும் போது மக்கள் உணவுக்குத் திண்டாடுகின்ற அவல நிலை ஏற்படுகிறது.

**சங்ககாலக் காதலும் இக்காலக்காதலும்**

சங்ககாலத்தில் காதல் தந்தை, தாய் போன்ற உறவுகள், ஊர், குலம், இனம், மதம், மொழி, நாடு பார்த்து வந்ததில்லை. இருமனம் ஒன்றிணைந்த போது திருமணம் நடந்தது என்று சங்க இலக்கியங்கள் தரும் சான்றுகளாகும். பண்டைய காலத்தில் தமிழர்களின் காதல் எவ்வாறு இருந்தது என்பதனை,

*“யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயனீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.”[3]*

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் காதல் எப்படிப்பட்ட நிலையினை எட்டியுள்ளது என்பதனை மீராவின் ஊசிகள் கவிதைத் தொகுப்பிலுள்ள கீழ்க்காணும் கவிதை காட்சிப்படுத்துகின்றது.

*"உனக்கும் எனக்கும்*
*ஒரே ஊர் -*
*வாசுதேவ நல்லூர்...*
*நீயும் நானும்*
*ஒரே மதம்...*
*திருநெல்வேலிச்*
*சைவப் பிள்ளைமார்*
*வகுப்பும் கூட....*
*உன்றன் தந்தையும்*
*என்றன் தந்தையும்*
*சொந்தக் காரர்கள்...*
*மைத்துனன் மார்கள்.*
*எனவே*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே."*[4]

என்னும் 'நாவயுகக் காதல்' கவிதையில் ஊர், மதம், குலம், உறவு பார்த்து இன்றைய கணினி உலகில் காதல் பிறப்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

**காதலின் சிறப்பும் மலிவும்**

சங்க காலத்தில் தலைவனுக்கும் தலைவிக்குமான நட்பு உயர்வானதாகப் போற்றப்பட்டுள்ளது. இந்நட்பினைச் சிறப்பிக்கும் பொருட்டு இயற்கையை உவமைப் பொருளாகக் காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். இதனை,

*"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கால் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே."*[5]

என்னும் பாடலடிகள் கட்புலனாக்குகின்றன. இங்கு நிலம், வானம், கடல், பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை குறிஞ்சி நிலத்தில் மலரும் குறிஞ்சிப் பூ

ஆகியவை உவமையாக வந்துள்ளதை அறியமுடிகின்றது. இவ்வாறாகச் சங்ககாலக் காதல் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய காலத்தில், இன்று கண்டதும் காதலாகி, நாளை மோதலாகிக் காதலர்கள் பிரிந்து செல்கின்ற நடப்பியலை நம் கண்முன் காணமுடிகின்றது. இதைத்தான் மீராவும் இன்றைய காலத்தில் சில நாட்களில் கெட்டுப்போகின்ற கத்தரிக்காயின் விலை அதிகமாகி விட்டதையும், காலங்காலமாக வாழக்கூடிய காதல் மலிவாகிவிட்டதையும் 'காதலோ காதல்' கவிதையின் வாயிலாகச் சாடுகின்றார். இதனை,

*"வாணி மணாளன்*
*பகலில்*
*வாரச் சந்தையில்*
*கிலோ விலை ரூபாய்*
*இரண்டெனக் கேட்டதும்*
*அயர்ந்தார்; கண்களை*
*அகலத் திறந்தார்,,...*
*காய்கறிக் காரன்*
*கடுப்பில் கேட்டான்*
*'அத்தனை மலிவாய்*
*அள்ளிக் கொள்ள*
*கத்தரிக்காய் என்ன*
*காதலா...?"*[6]

என்னும் கவிதையடிகள் எடுத்துரைக்கின்றன. இன்று வயது பேதமின்றி அனைவரும் காதலிக்கிறார்கள். இது மட்டுமில்லாமல் காதலர்கள் எதிர்காலச் சிந்தனையின்றி, நிரந்தர வேலையின்றி அவசர அவசரமாய் காதலிக்கிறார்கள். இதனால், திருமணமான சில மாதங்கள்; வருடங்களில் வாழ்க்கையில் நிம்மதி இல்லாமல், சண்டை சச்சரவோடு, காவல் நிலையம், நீதிமன்றம் என்று வழக்குகளைச் சந்தித்திக்கிறார்கள். பின்பு, தாங்கள் நிம்மதியை இழப்பதோடு, பெற்றோர்களின் நிம்மதியையும் இழக்கச் செய்கின்ற நடப்பியலையும் காணமுடிகின்றது. இப்படிப்பட்ட காதலர்களால்தான் சங்ககாலக் காதல் இன்று மதிப்பிழந்து மலிவாய்ப் போய்விட்டது என்று மீரா சுட்டுகிறார்.

 ***ISSN: 2320-3412(P), 2349-1639(O)***

**கல்வியும் கையூட்டும்**

இன்றைய காலகட்டத்தில் கல்வி பெறுவதற்கும், வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கும் தகுதிகள் இருந்தாலும், கையூட்டுக் கொடுத்தால்தான் கல்வியும், வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்ற முறைமுகச் சூழல் நிலவுகின்றது. மீராவும் ஒவ்வொரு கல்விப் பாடப்பிரிவுளுக்கும் காலத்திற்கு ஏற்றவாறு கையூட்டு வாங்கப்படுகின்றது என்பதனை,

*“பி.யு.சி.யா?*
*ஒரு நூறு போதும்.*
*பி.எஸ்சி.பி.எட்*
*இருநூறு ஆகும்.*
*எம்.எஸ்சி. ஆயிரம்*
*எம்.பி.பி.எஸ்.*
*ஏழு ஆயிரம்.”*[7]

என்னும் ‘கல்வி சிறந்த தமிழ் நாடு’ கவிதையின் மூலம் மீரா சான்றுபகர்கின்றார். இக்காலகட்டத்தில் ஒவ்வொரு பாடப்பிரிவுகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், இடங்களுக்கும் ஏற்றவாறு இலட்சக்கணக்கில் கையூட்டுகள் மறைமுகமாக வழக்கத்தில் உள்ளது நாடறிந்ததாகும்.

**நடிகையின் மோகம்**

மக்கள் இன்று தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றைப் பார்த்து நடிகைகள், நடிகர்கள் மீது அதீத மோகம் கொண்டுள்ளனர். அதானல் தான் நடிகர்கள், நடிகைகள் எங்கு வந்தாலும் அவர்களைப் பார்ப்பதற்குக் கூட்டம் அலைமோதுகின்றது. அக்கூட்டத்தில் சிக்கி உயிர் இழப்பும், பெரிய காயங்களும் மக்களுக்கு ஏற்படுகின்றது. இந்நடப்பியலை மீரா தமது கவிதையின் பாடுபொருளாகக் கொண்டு, ‘பெருங்காயம்?’ என்னும் கவிதையின் வாயிலாக நையாண்டியும், கிண்டலுமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இதனை,

*“……சித்திரை வீதியில்*
*சினிமா நடிகை*
*ஸ்ரீஸ்ரீஸ்ரீயைத்*
*திக்கு முக்காடச்*
*செய்த கும்பலில்*

*சிக்கிய அறுபது பேர்க்கு*

*முதுகில் முகத்தில்*

*நெஞ்சில் காயம்!"*[8]

என்னும் கவிதையடிகள் விளக்குகின்றன. விமான விபத்தில் சிக்கிய முப்பது பேருக்கு முதுகில் காயம். சண்டையில் முப்பது பேருக்கு முகத்தில் காயம். ஆனால், நடிகையைப் பார்க்கச் சென்ற அறுபது பேருக்கு முதுகில், முகத்தில், நெஞ்சில் பெரிய காயங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால், மக்களிடையே நிலவும் நடிகையின் மோக உணர்வை நகைச்சுவை உணர்வுடன் கேலியும், கிண்டலும், நையாண்டியுமாகக் கவிஞர் மீரா எடுத்துரைக்கின்றார்.

**தமிழ்ப்பற்றாளரின் நிலை**

தான் தமிழ்ப்பற்று உடையவன். அதனால் வடமொழிச் சொற்களை பேசவும் எழுதவும் மட்டேன். பிறர் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தினாலும் தன்னால் பொறுத்துக் கொள்ள இயலாது என்று சொல்பவர், எழுத்தின் மீது மட்டுமே கவனத்தைச் செலத்துகின்றார். அந்த எழுத்து இடம்பெற்றுள்ள சொல்லின் மீதும், அச்சொல் தருகின்ற பொருளின் மீதும் அவருக்கு அக்கறை இல்லை என்று மீரா சாடுகின்றார். இதனை,

"*தேவ பாஷையில்*

*...................*

*ஜாதி வேண்டும்*

*ஜாதி வேண்டும்*

*...................*

*ஓய் ஓய் இனிநீர்*

*ஜாதி வேண்டும்*

*என்றால் பொறுமையாய்*

*இருக்க முடியாது என்னால்*

*சரியாய்ச்*

*சாதி வேண்டும்*

*என்றே சாற்றும்."*[9]

'*தமிழ்ப் பற்று*' என்னும் கவிதையடிகள் சிந்திக்க வைக்கின்றன. தமிழ்ப் பற்றாளருக்கு எழுத்தில் மாற்றம் செய்தால் மட்டும் போதும் என்கிறார். 'சாதி' என்னும்

உயிர்க்கொல்லி நாட்டில் இருப்பது பற்றி அவருக்குக் கவலையில்லை என்று மீரா கோபக் குரல் கொடுக்கின்றார். இப்படிப் பேசுபவர்கள் உண்மையான தமிழ்ப் பற்று உடையவர்களாக இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

**அரசு அலுவலர்களின் செயல்பாடு**

அரசு அலுவலகங்களில் அலுவலகச் செயல்பாடு எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது குறித்து மீரா, காலையில் பத்துமணிக்கு அவசர அவசரமாக அலுவலகம் வருவார்கள். வந்ததும் அலுவலகப் பணியைத் தொடராமல் அரட்டி அடிப்பது, வெட்டிப்பேச்சுப் பேசுவது, சிறிது நேரம் கழிந்ததும் தேநீர் நிலையம் சென்று தேனீர் குடிப்பார்கள். அதன்பின்பு சிறிது நேரம் ஆனதும் மதிய உணவு உண்பார்கள். உண்ட களைப்புத் தொண்டனுக்கும் உண்டு என்பது போலக் குட்டித் தூக்கம் போடுவார்கள். பின்பு, குமுதம், ஆனந்த விகடன் போன்ற பத்திரிகையைப் படிப்பார்கள். பின்பு சிற்றுண்டி நிலையம் சென்று வருவார்கள். அன்றைய நாள் இனிதே முடிவுபெறும். இப்படியாகத்தான் பெரும்பாலான அரசு அலுவலர்களின் செயல்பாடு இருக்கின்றது என்று ‘கடமையைச் செய்’, ‘அவசரக்காரன்’ என்னும் கவிதைகளின் மூலமாகச் சமூப் பிரச்சினையைக் குறிப்பிடுகின்றார்.

அரசிடமிருந்து மாதக்கூலியைத் தவறாமல் அலுவலர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அதுபோல கடமையையும் சரியாகச் செய்யவேண்டும் என்று இப்பிரச்சனைக்குத் தீர்வாக மீரா தனது கருத்தினைப் புலப்படுத்துகின்றார். அவர்காலத்திலிருந்து இன்றுவரையிலும் அரசு அலுவலர்கள் மாறவில்லை என்பதை மீராவின் கவிதைகள் புலப்படுத்துகின்றன.

**ஆசிரியர்களின் புலம்பல்**

அரசுப் பள்ளியில் ஆசிரியர்களுக்குப் பாடம் நடத்துகின்ற வேலையை மட்டும் கொடுத்தால் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் பாடம் நடத்துவார்கள். மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் அட்டைக் கணக்கெடுப்பு, அறுவைச் சிகிச்சை மருத்துவ முகாமிற்கு ஆள் பிடித்தல் இதுபோன்ற கூடுதல் வேலைகளையும் அரசு கொடுக்கின்றது. இதனை,

*"பள்ளி திறந்தது;*
*அ-சொல்லிக் கொடுத்தோம்*
*அப்புறம்.....*
*அறுவை சிகிச்சைக்கு*
*ஆளைப் பிடிக்க*
*வலையை வீசப் போனோம்*
*அப்புறம்...*
*சீனி அட்டையைத்*
*தெருத் தெருவாக*
*விநியோகிக்கப் போனோம்.*
*அப்புறம்...வாக்குப் போடும்*
*மன்னர் தொகையைக்*
*கணக்கெடுக்கப் போனோம்*
*தேர்வு வந்தது;*
*ஃ – சொல்லி முடித்தோம்."*[10]

என்னும் 'இடைவேளை' கவிதையடிகள் உணர்த்துகின்றன. இதனால், பள்ளி திறந்ததும் 'அ' சொல்லிக் கொடுக்கின்றார்கள் ஆசிரியர்கள். இடையில் மேற்கூறிய அரசு சொன்ன வேலைகளையும் செய்து முடிக்கிறார்கள். தேர்வு வந்துவிடுகிறது 'ஃ' சொல்லிக் கொடுத்து முடிக்கிறார்கள். வேறு எந்தப் பாடத்தையும் மாணவர்களுக்கச் சொல்லிக்கொடுக்க முடியவில்லை என்று ஆசிரியர்களின் புலம்பல்களையும் மீரா எடுத்துரைக்கின்றார்.

அரசியல் வாதிகளின் சுயநலப்போக்குகள், அரசியல் வாதிகள் வறுமையை வெளியேற்றும் முறை, இக்காலத்தில் காதலர்களின் நிலைப்பாடு, காதலின் சிறப்பும் மலிவும், கல்வியும் கையூட்டும், மக்கள் நடிகையின் மீது மோகம் கொண்டுள்ளதால் ஏற்பட்ட காயங்கள், போலியான தமிழ்ப் பற்றாளர்கள், அரசு அலுவலர்களின் செயல்பாடுகள், ஆசிரியர்களின் புலம்பல்கள் போன்ற சமூகப் பிரச்சனைகளை மீரா தமது ஊசிகள் கவிதையின் வாயிலாக மக்களுக்குச் சுவையாகவும், குத்தலாகவும், நையாண்டித் தனமாகவும் பறைசாற்றுவதோடு நின்றவிடாமல், அதற்கான தீர்வையும் விட்டுச் சென்றுள்ளதனை இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

**குறிப்புக்கள்:**

1. ஊசிகள் – வேகம், ப.15.
2. ஊசிகள் – வறுமையே வெளியேறு, ப.18.
3. சுபாஷ் சந்திரபோஸ்,ச. தமிழ் இலக்கிய வரலாறு ப.33.
4. ஊசிகள் – நவயுகக் காதல், ப.50
5. சுபாஷ் சந்திரபோஸ்,ச. தமிழ் இலக்கிய வரலாறு.பக்.33.
6. ஊசிகள் – காதலோ காதல் , ப.20.
7. ஊசிகள் – கல்வி சிறந்த தமிழ் நாடு, ப.69.
8. ஊசிகள் – பெருங்காயம் , ப.29.
9. ஊசிகள் – தமிழ் பற்று, ப.16.
10. ஊசிகள் – இடைவேளை, ப.82.

**துணைநூல் பட்டியல்.**


1. சுபாஷ் சந்திரபோஸ்,ச. தமிழ் இலக்கிய வரலாறு, பாவை வெளியீடு.
2. ராசேந்திரன், மீ.1974, ஊசிகள் கவிதை, அன்னம் வெளியீடு, மனை எண்.1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613007.
3. ஜெயம், அ. சந்திரலேகா வைத்தியநாதன், தமிழ் இலக்கிய வரலாறு, ஜனகா பதிப்பகம்,15/63, தம்பையா சாலை, மேற்கு மாம்பழம், சென்னை – 6000033.
4. Tamil virtual university.com.

This document was created with the Win2PDF “print to PDF” printer available at
http://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.

This page will not be added after purchasing Win2PDF.

http://www.win2pdf.com/purchase/